தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au


பேச்சுப் போட்டி 02-06-2018 ஆண்டு:- 8

அனைவருக்கும் வணக்கம்.

## நான் விரும்பும் கவிஞர் பாரதிதாசன்

தமிழ்மொழி தன்னிகரற்றது. உலகம் போற்றும் செம்மொழிகளில் ஒன்று. அதனை வளம் படுத்தியவர்கள் நாவன்மை மிக்க நல்லறிஞர்களும் கவிஞர்களும் ஆகும். தமிழ்மொழிக்கும் சமுதாயத்துக்கும் ஏற்றம் தரும் கருத்துக்களைக் கவிதை மூலம் பாடியவர்களில் குறிப்பிடத்தக்கவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அவரே நான் விரும்பும் நற்றமிழ்க் கவிஞர் ஆவார்.

'தமிழுக்கு அமுதென்று பேர்; அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று முரசு கொட்டியவர் பாரதிதாசன். பாரதிதாசன் தமிழே வடிவானவர். தமிழின் உயர்வுக்காக வாழ்நாள் முழுவதும் உழைத்தவர். தமிழ் நாட்டைப் பெருமைப்படுத்திய பாரதியின் எண்ணங்களை நம் இதயங்களில் ஏற்றியவர். எளிய தமிழில் எண்ணற்ற கவிதைகள் படைத்தவர்.

பாவேந்தர் பாரதிதாசன் 1891 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29ஆம் நாள் புதுச்சேரி என்னும் இடத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் கனகசுப்புரத்தினம். பாரதியார் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தமது பெயரைப் பாரதிதாசன் என ஆக்கிக் கொண்டவர். இவர் தமிழ்ப்பற்றும் தமிழின உணர்வும் கவியாற்றலும் மிக்கவராக விளங்கினார். மொழியறிவு, இசையுணர்வு, சமூக சீர்திருத்தச் சிந்தனை என்பன அவரைப் புரட்சிக் கவிஞராக மாற்றின.

'சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் - என் சாம்பலும் தமிழ் மணம் வீசவேண்டும்' என்னும் கொள்கை கொண்டவர் புரட்சிக் கவிஞர்.

தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் மனித சமுதாயத்தின் உயர்வுக்கும் இறுதிவரை அருந்தொண்டாற்றிய பாவேந்தர் பாரதிதாசன் நாமம் நற்றமிழ் உள்ளவரை நானிலமெங்கும் நின்று நிலைக்கும் என்பது திண்ணம்.

பாவேந்தர் நாமம் வாழ்க! வாழ்கவென வாழ்த்துவோமாக!

நன்றி.